# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்


| மலர் 4 | மார்ச் 1991 | இதழ் 3 |
|---|---|---|





வெளியிடுவோர் :

**ஈரோடு கிறிஸ்துவின் சபையார்**

2, மணல் மேடு வீதி, ஈரோடு-638 002.

28ம் பக்க தொடர்ச்சி

**திருமுழுக்குக்குப் பிறகு ஒருவன் கவனமாய் வாழ வேண்டும்.**

சாத்தானின் முக்கிய வேலை பரிசுத்தவான்களோடு யுத்தம் செய்து அவனை விழத் தள்ளுவது தான். (வெளி 13:7) அதில் வெற்றி பெறும்போது மிகுந்த மகிழ்ச்சியடைகிறான். மேற்சொல்லப்பட்டுள்ள காரியங்களில் ஏதேனும் ஒன்றில் விழுந்தால் கூட அவனுக்கு வெற்றியே. அதனால்தான் அப்போஸ்தலன் பேதுரு **''தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள். ஏனெனில் உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ஜிக்கிற சிங்கம் போல எவனை விழுங்கலாமே என்று வகை தேடிச் சுற்றித்திரிகிறான்.** என்கிறார். (1 பேதுரு 5 8) அவர் எச்சரிப்போடு நிறுத்திக் கொள்ளாமல் அவைகளை சமாளிப்பதற்கு தேவையான சில அறிவுரைகளையும், ஆலோசனைகளையும் கூடத் தந்திருக்கிறார். **''விசுவாசத்தில் உறுதியாயிருந்து அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்''** என்கிறார், (வ.9) இதைக் குறித்து, **பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள். அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப் போவான்.** (யாக் 4:7). என்கிறார் யாக்கோபு.

இவைகளையெல்லாம் செய்வோமானால் ஆவிக்குரிய காரியங்களில் அபிவிருத்தி அடைந்து பிசாசின் தந்திரங்களுக்கும், உபாயங்களுக்கும் எதிர்த்து நிற்க முடியும். இவைகளைக் கவனியாமல், ஆவிக்குரிய வளர்ச்சியடையாமலும் விழிப்புணர்வு அற்றவர்களாகவும் நாம் இருப்போமானால் சாத்தான் நம்மை மேற்கொள்வதற்கு நாமே இடம் அளித்து ஊக்குவித்த மாதிரி ஆகும்.

**பில் ஜேக்ஸன்.**

## இதழின் உள்ளே


1. என்னுடைய திட்டமா? தேவ சித்தமா? 1-5
2. பிரசங்கிமார்களுக்கு சில ஆலோசனைகள் 6-10
3. வாக்குத்தத்தமும் அதன் நிறைவேற்றமும் 11-15
4. சபையில் அங்கம் வகிப்பது அவசியமா? 16-17
5. இயேசுவின் வாழ்வை விவரிக்கும் சுவிசேஷங்களை பொருள் உணர்ந்து கற்றுக் கொள்ளும் வழிகள் 18-23
6. வேதாகமம் கூறுகிற ஒன்றுகள் 24-25
7. திருமுழுக்குக்குப் பிறகு என்ன? 26 28

# THIRUMARAIAASAAN

Editor
E.Z. SELVANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
2, Manalmedu Street, ERODE-638 002, Tamil Nadu, India
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 4. March—1991 Issue 3

**ஆசிரியவுரை :**

## என்னுடைய திட்டமா? தேவ சித்தமா?

சுமார் கி.பி. 57ல் அப்போஸ்தலன் பவுல் ரோமாபுரியில் உள்ள பரிசுத்த வான்களுக்கு ஒரு கடிதம் எழுதுகிறார். அதில் அவர்களுடைய விசுவாசம் உலகமெங்கும் பிரசித்தமாயிருக்கிறது என்று அவர்களை மெச்சிக் கொள்கிறார் (ரோமர் 1:8) அவர் களைக் காணவும், ரோமாபுரியாருக்கு சுவிசேஷம் அறிவுக்கவும், தனக்குள்ள வாஞ்சையைத் தெரிவிக்கிறார் (ரோமர் 1,15) ஆனாலும அவருடைய எண்ணம் நிறைறோமல் தேவனால் தடுக்கப்பட்டு விட்டதாகப் புலம்புகிறார் (ரோமர்: 13; 15: 22) இருந்த போதி-லும் நான் ஸ்பெயின் நாட்டுக்குப் போகும்போதாவது உங்கள் ஊர் வழியாய்ப் பயணம் செய்து, உங்களைக் கண்டு கொள்ளவும் உங்களிடத்தில் சற்றுத் திருப்தியடைந்த பின்பு, அவ்விடத்திற்கு உங்களால் வழி விட்டனுப்பப்படவும் எனக்குச் சகாயம் கிடைக்கும் என நம்புகிறேன் என்று தன் ஆதங்கத்தை விவரிக்கிறார் (ரோமர் 15:24,28)

கர்த்தரே தரிசனத்தில் **''பவுலே, நீ திடன் கொள், நீ என்னைக் குறித்து எருசலேமில் சாட்சி கொடுத்ததைப் போல ரோமாவிலும் சாட்சி கொடுக்க வேண்டும்'** என் றாரே (அப் 23:11) பின்னே, ஏன் எனக்கு ரோமாபுரிக்குப்போ-வதற்கு தடை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது? என்று பவுலுக்கு ஒரே குழப்பமாக இருந்திருக்கலாம். தேவன் சொன்னதில் மாற்ற மில்லை பவுல் அப்போஸ்தலன் ரோமாபுரிக்குப் போனார், சுவி-சேஷமும் அறிவித்தார். ஆனால் அவர் கற்பனை செய்து கொண்-

டிருந்ததைப் போலவும், அவர் விரும்பிய கால கட்டத்திலும், அவருடைய தீர்மானத்தின்படியும் அல்ல. சிறைக் கைதியாக அழைத்துச் செல்லப்பட்டார். கைதியாக நான் பிடிக்கப்பட்ட பிறகு, நான் சுவிஷேத்தைப் பிரகடனம் செய்வது எப்படி முடியும்? என் திட்டமெல்லாம் பாழாகி விட்டதே என்று பவுல் நிலை குலைந்து போயிருக்கலாம். ஆனால் தேவன் தன் திட்டத்தை நிறைவேற்றியே நிறைவேற்றினார். பவுல் ரோமாபுரியில் தனக்கென்று ஒரு வீட்டை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு, அங்கே கிறிஸ்துவுக்கு சாட்சியாக வாழ்ந்தார். ஏராளமானவர்கள் அவருடைய சிறை வீட்டுக்கு வந்து சுவிசேஷத்தைக் கேட்டனர். தடையில்லாமல் தேவனுடைய இராஜ்ஜியத்தைக் குறித்துப் பிரசங்கித்து கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைப் பற்றிய விசேஷங்களை உபதேசித்துக் கொண்டிருந்தார் (அப் 28: 23, 30, 31)

பின்னர் ஒரு சமயம் தன் சிறை நாட்களை நினைவு கூர்ந்து **''சகோதரரே எனக்குச் சமபவித்தவைகள் சுவிசேஷம் பிரபல்யமாவதற்கு ஏதுவாயிற்றென்று நீங்கள் அறிய மனதாயிருக்கிறேன்.**

**அரண்மனை எங்கும் உள்ளவர்களுக்கும், மற்றயாவருக்கும் என் கட்டுகள் கிறிஸ்துவுக்குள்ளான கட்டுகள் என்று வெளியரங்கமாகி சகோதரரில் அநேகர் என் கட்டுகளாலே திடன் கொண்டு பயமில்லாமல் திரு வசனத்தைச் சொல்லும்படி அதிகமாய்த் துணிந்திருக் கிறார்கள்.** என்று பெருமிதம் கொண்டு தன்னுடைய திட்டத்தைக் காட்டிலும் தேவனுடைய திட்டமே சிறந்தது என்று ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கிறார் பிலி 1:12-14)

மனிதர்களாகிய நாம் மிகுந்த ஞானத்துடனும் பாரத்துடனும் எச்சரிப்புடனும் திட்டங்களைத் தயாரித்து, கர்த்தருடைய ஊழியத்தைச் செய்வதாக நினைத்துக் கொண்டாலும். தேவனுக்கு என்று ஒரு திட்டம் உண்டு. அது அநேக நேரங்களில் நம்முடைய திட்டத்துக்கு ஒத்துப் போகாது. அப்பொழுதெல்லாம் நமக்குக் கொடுக்கப்பட்ட அந்த முள் நீங்க வேண்டும் என்று கண்ணீரோடு மன்றாடியிருப்போம். ஆனால் அந்த முள் நீக்கப்படாதது மட்டும் அல்ல, அது இன்னும் கூர்மையாகி நமக்கு வேதனை அளிக்கிறதை நாம் நினைத்து ஆயாசப்பட்டு ஆண்டவருடைய சித்தத்தைப் புரிந்து கொள்ளாமல் நாம் தேவனை சபித்துவிட்டு செத்துப்போகலாம் என்று முடிவுக்கு வருமுன்னே (யோபு 2:9) **உன் பெலவீனத்திலே என் பெலன் பூரணமாய் விளங்கும்** (2 கொரி 12:9) என்ற மெல்லிய சத்தத்தால் நம்மைத் தேற்று-

கிறார். நம்முடைய பெலத்தையும், திறமையையும் குறித்துப் பெருமை பாராட்டிக் கொள்ளாதபடி, தேவன் மேல் சார்ந்து அவருடைய சித்தத்துக்கு ஒப்புக் கொடுப்பதற்கு, நமக்குக் குறிப்பிட்ட சோதனைகளும், துன்பங்களும் அவசியமாக இருந்திருக்கலாம்.

நான் கர்த்தருடைய திராட்சைத் தோட்டத்தில் இன்னும் சிறப்பாகச் செய்வதற்கு இன்னும் சில வசதிகள் இருந்தால் இன்னும் பெரிய அறுவடைட்யைச் செய்து காண்பிப்பேன் என்று ஏங்கியிருப்போம். ஆனால் இப்படியே வறுமைக்கும் பிரச்னைகளுக்கும் மத்தியில் உழல்வது, நாம் மனத் தாழ்மையோடு ஊழியம் செய்வதற்கு நல்லது என்று தேவன் நினைத்திருப்பார். சவுல் அரசனுடைய உடைகளையும் போர் ஆயுதங்களையும் தரித்துக் கொண்டு கோலியாத்தை வெல்வதற்கு தாவீது முயற்சித்தான். ஆனால் அது அவனுக்குச் சரிப்பட்டு வரவில்லை. தன்னுடைய எளிமையான மேய்ப்பனின் ஆடைகளும் போர் ஆயுதங்களும் கோலியாத்தை வீழ்த்துவதற்குப் போதுமானது என்னும் தேவ திட்டத்தைப் பின்னர் அவன் உணர்ந்தான் (1சாமு-17:38-51) வசதியாக இருக்கிற ஊழியனைப் பார்த்து, நானும் அப்படியிருந்தால் நன்றாக இருக்குமே என்று ஆசைப்பட வேண்டாம். தேவன் 'உனக்குக் கொடுத்திருக்கிற தாலந்துகளை கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்து உபயோகி. தேவன் அற்புதங்களைச் செய்வார்.

மோசேயைப் பயன்படுத்தியதைப் போல நம்மையும் ஒரு முக்கியமான பணிக்கு தேவன் பயன்படுத்த மாட்டாரா? என்று அங்கலாய்த்திருப்போம். (அப் 7:25) மோசேயுக்குக்கல்விச் செல்வமும், நிர்வாகப்பயிற்சி, தலைமைத்துவப்பயிற்சி, வில்வித்தை, வாள் வீச்சு இன்னும் எத்தனை எத்தனையோ பயிற்சிகளும் கொடுக்கப்பட்டிருக்கலாம். (அப் 7:22) இளமை இருந்தது (வ 23) சமுதாயப் பற்று இருந்தது (வ 24) சொல்லப்போனால் தேவனே மோசேயை அப்பணிக்கு என்று தான் பயிற்றுவித்தார். அப்படியில்லாவிட்டால் அடிமைகளைப் பெற்றோராகக் கொண்ட ஒரு அடிமை, தான் அடிமையாக இருக்கிற அதே நாட்டின் அரசுக் கட்டில் ஏற சூழ்நிலை அமையுமா? ஆனால் தேவன் நியமித்த நேரமும், சூழ்நிலைகளும் வரவில்லை என்பதை மோசே அறிய முடியாமல் உயிர் பிழைத்தால் போதும் என்று மீதியான் தேசத்துக்கு ஓடிப் போகச் செய்தார். தேவனுடைய திட்டத்தில் மாற்றமா? இல்லை, இல்லை. மோசே மீதியான் தேசத்துப் பாலைவனப் பல்கலைக்கழகத்தில் மௌனம் என்னும் சிறப்புப்பாடத்தை எடுத்து நாற்பது ஆண்டுகள் பயில வேண்டும் என்று நினைத்தார். மோசே எப்படிப்பட்ட கடினமான பணிக்கு ஏற்படுத்தப்பட்டவன்

என்பதை மோசேயை விட தேவன் தெளிவாக அறிந்திருந்தார். சகோதரனே, அவசரப்பட்டு ஆசைப்படாதே, கர்த்தருடைய வேலைக்காகக் காத்திரு.

கர்த்தருக்கு எவ்விதமான நிபந்தனைகளையும் விதிக்காமல் அவருடைய திட்டங்களுக்குத் திருத்தங்கள் கொடுக்காமல் ஊழியத்தை மேற் கொள்ளுங்கள் **என்னுடைய சித்தமல்ல உம்முடைய சித்தமே ஆகக்கடவது** என்று தேவகுமாரனாகிய இயேசு ஜெபித்தார், செயல்பட்டார் என்றால் நானும் நீங்களும் எத்தனை அதிகமாய் நம்மைத்தாழ்த்தி அவருடைய சித்தத்துக்கு ஒப்புக் கொடுக்க வேண்டும்? நான் குறிப்பிட்ட நகரத்தில் தான் பணியாற்றுவேன். ஆண்டவரே, எனக்கு ஒரு மோட்டார் சைக்கிள் தந்தால் நான் ஊழியத்துக்கு வசதியாக இருக்கும். சொந்த இடம் இல்லாததால் ஊழியம் பெருக வாய்ப்பில்லை. ஆகையால் சொந்தமாக ஒரு இடத்தைக் கொடும் என்றெல்லாம் பிடிவாதம் செய்து ஆண்டவரைத் துக்கப்படுத்தாதீர்கள், அவர் கசந்து போய் உங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றின கையோடு உங்களுக்குத் தண்டனையையும் கொடுத்து விடாதபடி அவருடைய பலத்த கரங்களுக்குள் அடங்கியிருங்கள் (எண் 11:33)

முன்னொரு காலத்தில் தென் இராஜ்ஜியமாகிய யூதாவை ஆண்ட மிகச் சிறந்த அரசனாக விளங்கினார் எசேக்கியா என்பவர், அவரைப் போல நல்ல அரசன் அவருக்கு முன்னும் இருந்ததில்லை பின்னும் இருந்ததில்லை என்று பேர் பெற்று இருந்தார். அவர் மரிக்க வேண்டிய தருணம் வந்து விட்டது என்று தேவன் ஏசாயா தீர்க்கன் மூலமாக தகவல் தந்தார். இது எல்லாருக்கும் கிடைக்கும் பேறு அல்ல; இருந்த போதிலும அவர் தேவசித்தத்துக்கு ஒப்புக் கொடாமல் இன்னும் சில காலம் வாழ வேண்டும் என்று விரும்பி கண்ணீர் மல்க மன்றாடினார். தேவன் அவர் விருப்பப்படியே பதினைந்து ஆண்டுகள் நீட்டிக் கொடுத்தார். என்ன பரிதாபம்! அந்த நீடிக்கப்பட்ட ஆண்டுகளில் அவர் சமாதானம் இழந்தார், அந்த நாட்களில் அவர் பெற்ற பிள்ளை தான் மனாசே என்ற பொல்லாத அரசன். அவர் தன் தகப்பனுக்கு எதிர்த் திசையிலே பயணம் செய்து தேவனுக்கு அருவருப்பான விக்கிரக ஆராதனையை ஊக்குவித்து நாட்டை அழிவின்பாதையில் அழைத்துச் சென்றான், எசேக்கியா தேவசித்தத்துக்கு ஒப்புக் கொடுத்து மரணத்தை ஏற்றுக் கொண்டிருந்தால் அவனுடைய ஆட்சி வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டிருக்கும். தேவசித்தத்துக்கு ஒப்புக் கொடுக்காததால் கிடைத்தது என்ன என்று சிந்தித்துப்பாருங்கள், வெறும் கெட்ட பெயர் தான்.

II ராஜா 20, 21ம் அதிகாரம்

ஆக நம்முடைய ஜெபங்களுக்கு இல்லை என்று மறுமொழி கிடைத்தாலும், நமக்குக் கொடுக்கப்பட்ட முள் எடுபட்டு போகா விட்டாலும். நம்முடைய பணித்திட்டங்கள் நிறைவேறாமற் போனாலும் நாம் கர்த்தருடைய சித்தத்துக்கு ஒப்புக் கொடுத்து நம்முடைய ஊழியத்தைச் செய்வோம். ஆபகூக் தீர்க்கனைப் போல மகிழ்ச்சியாயிருப்போம் (ஆபகூக் 3:17) அவரே **கர்த்தர். சர்வ வல்லவரோடே வழக்காடி அவருக்கு புத்திசொல்லு-கிறவன் யார்?** (யோபு 40 2)

E.Z. **செல்வநாயகம்**

திருமறை ஆசான் இதழ் உரிமை பற்றிய அறிக்கை
திங்களிதழ் விதிப்படிவம் IV

| | | |
|---|---|---|
| வெளியிடும் இடம் | : | **2, மணல்மேடு வீதி, ஈரோடு - 638 002.** |
| அச்சிடுவோர் பெயரும், முகவரியும் | : | **ஜீவசக்தி பிரஸ், 148-B கிருஷ்ண பாளையம், ஈரோடு - 638 003.** |
| வெளியிடுவோர் பெயர் | : | **கிறிஸ்துவின் சபை ஈரோடு.** |
| இந்திய குடிமக்களா? | : | **ஆம்** |
| முகவரி | : | **2, மணல் மேடு வீதி, ஈரோடு - 638 002.** |
| ஆசிரியர் பெயர் | : | **E.Z. செல்ல நாயகம்.** |
| இந்திய குடிமகனா | : | **ஆம்.** |
| முகவரி | : | **2, மணல்மேடு வீதி, ஈரோடு 638 002.** |
| இதழுக்கு உரியவர் பெயரும் முகவரியும் | : | **கிறிஸ்துவின் சபை 2, மணல் மேடு வீதி ஈரோடு 638 002** |
| இந்திய குடிமக்களா? | : | **ஆம்.** |
| முகவரி | : | **2, மணல்மேடு வீதி, ஈரோடு 638 002.** |

**E.Z.** செல்வ நாயகம் ஆகிய நான், மேலே தந்துள்ள விபரங்கள் நம்பகமும், உண்மையும் உடையவை என உறுதி கூறுகிறேன்.

(ஒப்பம்)
E.Z. **செல்வநாயகம்.**

ஈரோடு
23-3-91.

# பிரசங்கிமார்களுக்குச் சில ஆலோசனைகள்

இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷப் பணியில் ஈடுபாடு கொள்வது மிகவும் பெருமைக்குரிய காரியம். பிரசங்கியாராக விரும்புவது சர்ச்சைக்குரியது (யாக் 3:1) இருப்பினும் பிரசங்கியாராகிவிட்டால் அதற்கு இருக்கிற மிகப் பெரிய பொறுப்பை, ஒருவர் உணர்ந்து நடந்து கொள்ள வேண்டும். அவருடைய செயல்பாடுகள் நடத்தைகள், பேச்சுகள் யாவும் நாம் உன்னதமான தேவனுடைய ஊழியர்கள் என்ற எண்ணத்துடன் எப்பொழுதும் கவனத்துடன் இருக்க வேண்டும்.

ஆகவே ஏற்கனவே பிரசங்கியாக இருப்பவர்களுக்கும், ஆக விரும்புகிறவர்களுக்கும் சில ஆலோசனைகளை ஈண்டு குறிப்பிட விரும்புகிறேன். அவைகளை நீங்கள் சிந்தித்து, இதுவரை நீங்கள் அவைகளைக் கைக் கொள்ளாமல் இருந்தால் இனிமேலாவது நீங்கள் அதைக் கடைப் பிடிக்க வேண்டும் என்பதே என் ஜெபமும், விருப்பமுமாகும்.

நீங்கள் மக்களுக்கு சத்தியத்தைப் போதித்து, அவர்களை நல்வழிப் படுத்திக் கிறிஸ்துவுக்குள் கொண்டுவர வேண்டுமென்றால் உங்கள் செயல்பாடுகளும், அணுகுமுறைகளும் தேவனைப் பிரியப்படுத்துபவைகளாக மாத்திரம் இருந்தால் போதாது மக்கள் மத்தியிலும் உங்கள் நற்பண்புகள் பாராட்டும்படி இருக்க வேண்டும்,

1. முதலாவதாக நீங்கள் வேதாகமம் சொல்லுகிற ஒரே சபையாகிய கிறிஸ்துவின் சபை உறுப்பினராக இருக்க வேண்டும்.

2. நீங்கள் மக்களுக்கு எதைப் போதிக்கிறீர்களோ அதை உங்கள் வாழ்க்கையில் செயல்படுத்திக் காட்ட வேண்டும். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அப்படிச் செய்தார். அவரைப் பின்பற்றுகிற நாமும் அப்படியே செய்ய வேண்டும்.

3. அப்படிச் செய்யத் தவறினால் மக்கள் நீங்கள் மாய்மாலக்காரர்கள் என்று அடையாளம் கண்டு கொள்வார்கள். உங்கள் போதனைகள் எடுபடாது.

4. ஊழியம் செய்கிறவர்களுக்கு ஊதியம் கிடைக்க வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. ஆனால் அதை ஒரு பிழைக்கும் வழியாக எண்ணிச் செயல்படக் கூடாது. அப்படிச் செய்வதைக் காட்டிலும் பட்டினி கிடப்பது மேல்.

5. அதாவது கூலிக்கு மாரடிக்கக் கூடாது. சம்பளம் கொடுக்கிறவர்கள் சத்தியத்துக்கு விரோதமான உபதேசத்தைப் போதிக்கச் சொன்னால் நீங்கள் அதற்கு உடன்படக்கூடாது. நீங்கள் எவைகளை விசுவாசிக்கிறதில்லையோ அவைகளை எவ்வளவு ஆதாயம் கிடைப்பதாக இருந்தாலும் அவைகளைப் பிரசங்கிக்கக் கூடாது. ஏனெனில் அப்படிச் செய்பவர்களைக் கர்த்தர் வெறுக்கிறார்.

6. ஆரோக்கியமான உபதேசங்களடங்கிய நற்செய்தியைப் பிரசங்கிக்க ஊதியம் பெற்றுக் கொண்டு, தவறான உபதேசங்களைப் போதிப்பது கூடாது.

6) நீங்கள் பிரசங்கிப்பதை நூற்றுக்கு நூறு நீங்கள் விசுவாசிக்க வேண்டும். எள்ளளவும் சந்தேகமே இருக்கக் கூடாது. உங்களுக்கே தெளிவில்லாத ஒரு விஷயத்தைப் பிரசங்கித்து மற்றவர்களையும் குழப்பக் கூடாது.

7) உங்களுடைய ஊழியத்தை ஆத்தும பாரத்தோடு செய்யுங்கள். ஏதோ கடமைக்காக ஏனோதானோவென்று பொறுப்பில்லாமல் செய்தால் அதை மக்கள் அடையாளம் கண்டு கொண்டு உங்களை மதிக்க மாட்டார்கள். ஆகையால் பாசாங்கு வேண்டாம்.

8) ஆகாயத்தில் சிலம்பம் அடிக்கிறவர்களைப் போல வாயில் வந்தது வார்த்தை என்று பிரசங்கிக்கக் கூடாது **''கர்த்தர் இவ்வாறு உரைக்கிறார்''** என்று வேத வசனங்களை ஆதாரமாகக் காட்டித் தெளிவாய் போதிப்பதற்கு வேதாகமத்தை நன்கு கற்க வேண்டும்.

9) மக்களிடத்தில் அன்போடு பழகி அவர்கள் ஆத்துமா மேல் அக்கறையும் கரிசனையும் காட்ட வேண்டும்.

10) கர்த்தருடைய ஊழியத்தில் ஆர்வத்தோடு ஈடுபாடு கொள்ள வேண்டும். சோம்பலாகவும், அசிரத்தையாகவும் இருக்கக் கூடாது. சுறுசுறுப்பாகவும் உற்சாகமாகவும் ஆத்துமாக்களைத் தேடி அலைந்து போதித்து அவர்கள் சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படிய வேண்டிய அவசியத்தை வலியுறுத்த வேண்டும்.

11. சுவிசேஷத்தை பாமர மக்களும், புரிந்துகொள்ளுமாறு எளிமையாக்கி, விளக்கிச் சொல்ல வேண்டும். அவர்களுக்குத் தெளிவு ஏற்பட்ட பிறகு, அவர்கள் சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படிய வேண்டிய அவசியத்தை உணர்த்த வேண்டும். பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று தள்ளிப் போடக் கூடாது.

12) எல்லாரிடமும் குறிப்பாக சபை அங்கத்தினரிடம் எதார்த்த-மாயும் நாணயமாகவும் நடந்து கொள்ளுங்கள். அவர்களைத் தவறான பாதையில் வழி நடத்தாமலும், ஏமாற்றாமலும் எப்பொழுதும் உண்மையையே பேசுங்கள்.

13) பண விஷயத்தில் விழிப்புடன் இருங்கள். வீண் செலவு ஆடம்-பரச் செலவு ஆகியவைகள் கூடாது. கடன்பட்டுக் கொண்டு அவஸ்தைப் படாதிருங்கள். சகோதரரிடத்தில் கடன் வாங்-காமல் இருப்பதோடு கடன் கொடுக்கவும் கூடாது. நீங்கள் அவர்களுக்கு உதவுவது அவசியம் என்று தோன்றினால் அவர்-களுக்கு உங்களால் முடிந்ததை இனாமாகவே கொடுக்கலாம். கடன் அன்பைக் கெடுக்கும்.

14) உங்கள் பிரசங்க வல்லமையைப் பற்றியோ உங்கள் செல்வச் செருக்கைப் பற்றியோ, பாரம்பரியத்தைப் பற்றியோ, கல்வி-யைப் பற்றியோ தற் பெருமையாகப் பேசாதிருங்கள். பெரு-மையுள்ளவர்களைக் கர்த்தர் வெறுக்கிறார். மக்கள் பொறா-மைப்படுவார்கள். **உங்களுடைய வாய் அல்ல; பிறத்தி-யானே உன்னைப் புகழட்டும்** என்னும் திருவசனத்-தை நினைவில் வையுங்கள்.

15. சுவிசேஷத்தைப் பிரகடனப் படுத்துவதற்கும், கர்த்தரைப் பற்றிக் கொண்டு அறிக்கையிடுவதற்கும் வெட்கப்படாதீர்கள். சத்தியத்துக்காக எழுந்து நின்று போராடுங்கள்.

16. எப்பொழுது பார்த்தாலும் சள சள வென்று பேசிக் கொண்டு திரியாதீர்கள். அதிக வசனப்பினால் பாவம் இல்லாமற் போகாது. பேசுவதற்குப் பொறுமையாயும், கேட்கிறதற்குத் தீவிரமாயும் இருங்கள்.

17. மற்றவர்களைப் பேச விட்டு விட்டு பொறுமையாயும், கவன-மாயும் அவர்கள் சொல்வதைக் கவனியுங்கள். அவர்களுடைய கருத்துக்களையும் கேள்விகள், சந்தேகங்களைக் குறித்துக் கொண்டு சாந்தமாயும், வணக்கமாயும் பதில் சொல்லுங்கள். மற்றவர்களுக்கும் கருத்துச் சொல்ல உரிமையுண்டு என்பதை மறவாதீர்கள்.

18. உங்களிடத்தில் வருபவர்களை அன்போடும், மரியாதையோடும் நடத்தி போதித்து புத்தி சொல்லுங்கள்.

19. மற்றவர்களோடு உரையாடும் போதும், கற்பிக்கும் போதும், பிரசங்கிக்கும் போதும் கண்ணியக் குறைவான முறையில் எதையும் பேசாதீர்கள். நாவடக்கமுள்ளவர்களாக இருங்கள்.

20. ஆராதனையில் ''சர்வமும் நீங்களே'' என்ற பாணியில் செயல் படாமல் மற்றவர்களுக்கும் பங்கு கொடுத்து, ஊக்குவித்து பயிற்சி கொடுங்கள்.

21. பணம் கேட்டு அயல்நாட்டுச் சகோதரர்களுக்கு கடிதம் எழுதுவதை ஒரு தொழிலாகச் செய்யாதீர்கள். அது உங்களைப் பற்றி தரக்குறைவாக எண்ண இடமளித்து விடும். உங்கள் பசப்பு வார்த்தைகளை நம்பி, அவர்கள் உதவி செய்தாலும் பிரச்சனைதான். உங்கள் தகுதிக்கு மிஞ்சி செல்வந்தர்களாய் நீங்கள் காட்சி தரும்போது, அதைக் கவனிக்கிற மக்கள், இவனெல்லாம் கிறிஸ்தவர்களா? அல்லது அயல்நாட்டுப் பிச்சைக்காரர்களா? என்று இகழுவார்களே!

22. எப்போதும் சுத்தமாகவும், துப்பரவான ஆடை அணிந்தும் காணப்படவேண்டும். அதற்கென்று மேனாட்டுப் பாணியிலும், விலையுயர்ந்த ஆடைகளை உடுத்திக் கொண்டு, தேவையில்லாத 'பந்தா' செய்து கொள்ள வேண்டும் என்பதல்ல. ''கந்தையானாலும் கசக்கிக் கட்டு, கூழானாலும் குளித்துக் குடி'' என்பார்களே, அதைச் சொல்லுகிறேன்.

23. அப்படியில்லாமல் போனால், நீங்கள் கூறும் நற்செய்தியை மக்கள் செவிமடுத்துக் கேட்க மாட்டார்கள். துன்பத்திலும், வாழ்க்கைப் பிரச்சனையாலும் அல்லலுறும் மக்கள் தங்கள் பிரச்சனைகளை, ஓரளவு வாழ்க்கையில் முன்னேறியவர்களிடமும் சமுதாயம் மதிக்கும் நிலையிலும் உள்ளவர்களிடத்தில் தானே சொல்லி தீர்வு காண விரும்புவார்கள்!

24. உங்களுக்குக் குடும்பம் என்று ஒன்று இருந்தால் அதைப் பேணி பராமரிக்க வேண்டும். அவர்களும் உங்களோடு சேர்ந்து ஊழியத்தில் பங்கு கொள்ள உற்சாகப் படுத்த வேண்டும்.

25. தீய பழக்கங்களான மது அருந்துதல், சூது ஆடுதல், பீடி, சிகரெட் பிடித்தல், வெற்றிலை பாக்குப் போடுதல் ஆகியவைகள் கூடவே கூடாது இவைகள் உங்கள் ஊழியத்தை நாற்றம் அடிக்கச் செய்து விடும். இவைகளை விட்டு விட மனமில்லாதவன் ஊழியத்தைப் பற்றி நினைக்கவே கூடாது. ஒரு விசுவாசியே கூட இவைகளைச் செய்து கொண்டிருந்தால் மனம் திரும்ப வேண்டும்.

26. உங்கள் வாழ்க்கை சன்மார்க்கமுள்ளதாக இருக்க வேண்டும். உங்களுடைய வாழ்க்கை நெறி உங்களுடைய ஆன்மாவையும், உங்கள் பிரசங்கத்தையும் கேட்கிறவர்களுடைய ஆன்மாவையும் உய்விக்கவும் முடியும்; பாழ்படுத்தவும் முடியும். ஆகவே, உஷார்!

27. உங்கள் உரையாடல் பக்தி விருத்திக் கேதுவாக இருக்கட்டும். தூஷணமான வார்த்தைகள் உங்கள் வாயிலிருந்து வரவே கூடாது. ஒருவர் பிரச்சனையை இன்னொருவரிடம் சொல்லி தூற்றித் திரிய வேண்டாம்.

28. விசுவாசத்தோடும், நன்னடக்கையோடும் வாழ்ந்து நீங்கள் செய்கிற எல்லாவற்றிலும் கர்த்தரை ஸ்தோத்தரித்துக் கனம் பண்ணுங்கள்.

29. இளைஞராக இருக்கிற பிரசங்கிமார்கள் மிகவும் கவனமாகவும், எல்லாக் கற்புடனும் தங்கள் ஊழியத்தைச் செய்ய வேண்டும். சுயநலமுள்ளவர்களாய், கூலிக்கு மாரடிக்கிறவர்களாய், ஊழியர் என்பதனால் கிடைக்கும் கனத்தைத் தவறான முறையில் பயன்படுத்துகிறவர்களாய், சபை அங்கத்தினர்களின் அப்பாவித்தனத்தைச் சாதகமாக்கிக் கொண்டு சுக வாழ்வு வாழ்கிறவர்களாய்த் திரிகிற போலி ஊழியர்களை விட நீங்கள் வித்தியாசமானவர்கள் - நீங்கள் உங்கள் ஊழியத்தை உண்மையாய்ச் செய்கிறீர்கள் என்று கண்டு பிடிப்பதற்குக் கொஞ்சம் நாள் பிடிக்கும். அதனால் சோர்வடைந்து விடக் கூடாது.

30. சபையில் உள்ள சகோதரர்களை உற்சாகப்படுத்தி அவர்களையும் அணைத்துக் கொண்டு வீடுகளிலும், சபையிலும், நாட்டிலும் ஒற்றுமை நிலவப் பாடுபடுங்கள்.

31. உங்கள் பிராந்திய சபையைப் பலமுள்ளதாகக் கட்டுங்கள் கிறிஸ்துவின் சபை வளர்ந்து பெருகி, பட்டணங்களிலும், பட்டி தொட்டிகளிலும், நாட்டிலும் உலகெங்கிலும் பரவப் பாடுபடுங்கள்.

32. முதிர்ந்த பிரசங்கிமார்கள், இளம் பிரசங்கிமார்களுக்கு எல்லா நல்ல விஷயங்களிலும் முன்மாதிரியாக இருக்க வேண்டும். உங்கள் உடன் ஊழியர்களை விரோதிகளாகப் பார்க்காதீர்கள். அவர்களை உற்சாகப் படுத்துங்கள். ஒருவருக்கொருவர் உதவி செய்யுங்கள். ஒற்றுமையாய்ச் செயல்பட்டு கர்த்தருடைய பணியைப் பலப்படுத்துங்கள். இம் மாபெரும் நாட்டில் ஏராளமான மக்கள் சுவிசேஷத்தை ஒருமுறை கூடக்கேள்விப்படாமல் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் சந்தித்து உலக இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவை அறிமுகம் செய்யுங்கள். சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் சுவிசேஷத்தை விதையுங்கள். கர்த்தர் உங்கள் முயற்சிகளை ஆசீர்வதிப்பாராக.

J. C. சோட்

# வாக்குத்தத்தமும் அதன் நிறைவேற்றமும்

'என்னுடைய சபையைக் கட்டுவேன்' என இயேசு வாக்களித்ததை வேதாகமத்தைப் படிக்கும் சகலரும் அறிவர். ''என்னை யாரென்று நீ கூறுகிறாய்?'' என இயேசு கேட்ட கேள்விக்கு, சீமோன் பேதுரு பதிலளிக்கையில், ''நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து'' என்றார். இயேசு பதிலாக, ''யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான்; மாமிசமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார். மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக்கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்ளுவதில்லை'' (மத். 16; 16–18) எனக்கூறினார்.

ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய இயேசு என்னும் கிறிஸ்துவும் **தேவனே**. அவருடைய வார்த்தை தேவனுடைய வார்த்தையே, தேவன் வாக்கு மாறாதவர். தேவனுடைய ஒவ்வொரு வாக்குறுதியும் (தீர்க்கதரிசனமும்) நிச்சயமாக நிறைவேறக் கூடியது. என்னுடைய சபையைக் கட்டுவேன் என அவர் வாக்களித்த போது, நிச்சயம் அதைச் செய்வார் என நமக்குத் தெரியும். அந்த தீர்க்கதரிசனம் நிறைவேறும் என அறிவோம். ''பரலோக இராஜ்ஜியத்தின் திறவு கோல்களை நான் உனக்குத் தருவேன், பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும்; பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்.'' (மத். 16:19), என பேதுருவையும் அவரோடு கூட நின்ற அப்போஸ்தலர்களையும் நோக்கி இயேசு கூறினார். 18வது வசனத்தில், ''என் சபை'' எனக் குறிப்பிட்டதை, 'பரலோக இராஜ்ஜியம்' என 19வது வசனத்தில் கூறுகிறார் தேவன். இந்த இரு வார்த்தைகளும் ஒன்றையே குறிக்கின்றன. அதாவது சபை என்பதே இரஜ்ஜியம்.

வாக்களிக்கப்பட்டதும், தீர்க்கத்தரிசனமாக உரைக்கப்பட்டதுமான இராஜ்ஜியத்தைப்பற்றி வேதாகமம் பல இடங்களில் குறிப்பிடுகிறது. யோவான் ஸ்நானகன், இயேசு, அவரது சீடர்கள் எல்லோருமே இராஜ்ஜியம் சமீபத்திலிருக்கிறது என்று உரைத்தனர். இயேசு கூறினார். ''இங்கே நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய இராஜ்ஜியம் பலத்தோடே வருவதைக்காணுமுன், மரணத்தை ருசிபார்ப்பதில்லையென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்''. (மாற்கு 9:1).

தேவனின் இராஜ்ஜியம், அதாவது தேவனின் சபை, வல்லமையோடு வரும் எனக் கூறப்பட்டது. அவர் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு சிறிது முன்பு இயேசு தனது அப்போஸ்தலர்களிடம் கூறினார். ''பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும் போது நீங்கள் பெலனடைவீர்கள்.'' (அப் 1:8). பரிசுத்த ஆவியானவரின் வருகையே வாக்குத்தத்தம் செய்யப்பட்ட வல்லமையாகும். வல்லமை வந்தபோது இராஜ்ஜியமும் வந்தது. பரிசுத்த ஆவியானவரால் அப்போஸ்தலர்கள் ஞானஸ்நானம் பெற்றபோது, இயேசு கிறிஸ்து கட்டுவதாக வாக்களித்த சபையும் தோன்றிற்று.

பரிசுத்த ஆவியானவரை அனுப்பியதன் மூலம், தன் சபையைக் கட்டுவேன் என இயேசு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றினார். ''பெந்தேகோஸ்தே என்னும் நாள் வந்த போது .... அவர்களெல்லோரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு மொழிகளிலே பேசத் தொடங்கினார்கள்'' (அப் 2:1-4).

சபை என்பது ''அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாக ஏற்றுக் கொண்டு ஞானஸ்நானம் பெற்றவர்களின் கூட்டம் அன்றையத்தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.'' (அப் 2:41). ''இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்.' (அப். 2:47 . இரட்சிக்கப்படுவோரைக் தினமும் தேவன் சபையில் சேர்த்துக்கொண்டு வந்தார். சபை இரட்சிக்கப்பட்ட மக்களின் கூட்டம். இரட்சிக்கப்பட்ட மக்கள் எல்லோரும் சபையில் அங்கம் வகிக்கின்றனர். ஏனெனில் தேவன் இரட்சிக்கப்பட வேண்டியவர்களை தினமும் சபையில் சேர்த்துக் கொண்டு வந்தார். சபையில் இல்லாதவர்கள் இரட்சிப்புக்கு அருகதையற்றவர்கள்.

புதிய ஏற்பாட்டு காலத்தில், நற்செய்தியின் சத்தியம் மட்டுமே, சபை மக்களின் மனதில் ஒளியேற்றி வைத்தது. தேவனின் மக்கள் என அழைக்கப்பட அவர்கள் வெட்கப்படவில்லை. அம் மக்களின் தேவன் என அழைக்கப்படுவதில் தேவனும் வெட்கப்படவில்லை. இயேசுவைப் பற்றியும் அவருடைய பாடுகள் பற்றியும் மக்களுக்கு ஆர்வமுடன் போதித்து வந்தது சபை. அவர்களுடைய அணையாத நம்பிக்கை சகல இடங்களிலும் ஒளியேற்றி வைக்க அவர்களைத் தூண்டிற்று. எனவே, ''சிதறிப் போனவர்கள் எங்கும் திரிந்து சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள்'' (அப் 8:4).

அப்போஸ்தலர் பவுல் தீமோத்தேயுவிடம் கூறுகிறார். ''நான் உன்னிடத்திற்குச் சீக்கிரமாய் வருவேனென்று நம்பியிருக்-

கிறேன். தாமதிப்பேனாகில், தேவனுடைய வீட்டில் நடக்க வேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன்; அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது'' (1 தீமோ 3:14-15) சத்தியத்தின் முதுகெலும்பே சபைதான். பவுலைப் போல 'நற்செய்தியின் பாதுகாவலனாக' நாம் இயங்க வேண்டும். சபை விசுவாசத்தின் காவலனாகவும், சத்தியத்தின் ஆதாரமாகவும், இரட்சிப்பை பலருக்கும் அறிமுகப்படுத்தும் கூட்டமாகவும் செயல்படுகிறது.

முதலாம் நூற்றாண்டு சபை பிரமிக்கத்தக்க வளர்ச்சி அடைந்து பெருகிற்று. கிட்டத்தட்ட உலகின் பாதி மக்களை தனது சீடராக்கிக் கொண்டுள்ளது. உலகின் பல பாகங்களிலும் பரிசுத்தவான்கள் சென்று இரட்சிப்பின் நற்செய்தியை அறிவித்ததின் விளைவே இத்தகைய பிரமாண்டமான சபை வளர்ச்சிக்குக் காரணமாயிற்று, இரட்சிப்பின் கதையைச் சொல்லுவதே சபையின் தலையாயக் கடமையாக இருந்தது.

ஒரு கால கட்டத்தில் தொய்வான நிலையையும் சபை சந்திக்க வேண்டிய காலம் வந்தது. இறுதியாக சத்தியத்தை விட்டு விலகிப் போகும் அவல நிலைக்கும் அது தள்ளப்பட்டது. அந்த இருண்ட காலம் உலகம் முழுவதையும் ஆக்கிரமித்தது. அக்காலத்திலே ரோமன் கத்தோலிக்க சபையும், கிரேக்க ஆர்த்தடாக்ஸ் சபையும் தோன்றி தாங்களே உண்மையான கிறிஸ்தவர்கள் என்ற போலித்தனமான லேபிளை ஒட்டிக் கொண்டு மக்களை வஞ்சித்தனர்.

வேதாகமம் மக்களிடமிருந்து மறைக்கப்பட்டு, பின் அவர்களால் மறக்கப்பட்டு, மக்கள் இருளிலே நடந்து கொண்டிருந்த ஒரு பரிதாபமான இருண்ட காலமாக அது இருந்தது.

சத்தியத்தை விட்டு விலகிப் போன இருண்ட பூமியின் ஒரு மூலையிலே, ஒளி விளக்காக மீண்டுமாக சபை துளிர் விட்டுப் பிரகாசிக்கத் தொடங்கியது. புதிய ஏற்பாட்டு இரட்சிப்பின் திட்டமே மெய்க் கிறிஸ்தவம். பரலோக இராஜ்ஜியத்தின் விதை தேவ வசனமே என்பதை மக்கள் கண்டு பிடித்தனர். (லூக் 8:11). இராஜ்ஜியத்தின் விதை மட்டுமே இராஜ்ஜியத்தை உருவாக்கும் என்பதைச் சரியாகப் புரிந்து கொண்டனர். பெரியதோர் மறுமலர்ச்சி தோன்றிற்று. இரட்சிப்பின் செய்தியைக் கேட்டு மீண்டுமாக மக்கள் சிலிர்த்தெழுந்தனர்; சபை வளர்ச்சிபெற்றது. முதல் நூற்றாண்டு சபையின் வளர்ச்சியை மிஞ்சும் அளவிற்கு மறுமலர்ச்சி தோன்றிற்று.

சபை நிலைத்து நின்று, மூலை முடுக்கெல்லாம் மீண்டும் நற்செய்தி அறிவிக்கப்பட்டு வந்தது. விசுவாசம் காக்கப்பட்டு,

சத்தியம் திடமாக பிரகடனம் செய்யப்பட்டது. சீடர்களின் எண்
ணிக்கை பல மடங்காகப் பெருகிற்று.

பரிதாபத்திற்குரிய காரியம் என்னவென்றால், மீண்டுமாக
நாம் ஒரு சரிவை எதிர்நோக்கி நிற்கும் அவல நிலை தான் ஆசீர்-
வாதங்களை இழந்து போகும் வரை அவற்றின் மகத்துவத்தை
மக்கள் உணருவதில்லை. அடிமைகளாக இருப்பவர்கள் சுதந்திரத்தை
விரும்புகின்றனர். சிறைக் கைதிகள் வெளி உலகக்காற்றை சுவாசிக்-
கத் துடிக்கின்றனர். மறுபக்கத்திலோ, செல்வச் செழிப்பிலே திளைப்-
பவர்கள், வறுமையின் கொடுமையை நினைத்துக்கூட பார்ப்ப-
தில்லை. அதே போல சத்தியத்தை கடைபிடிப்பவர்களும் அதை
இழந்து போகும் ஆபத்தை உணருவதில்லை.

தேவ வசனமாகிய தெய்வீக நூலையுடைய மக்களாக நாம்
ஒரு சமயத்தில் இருந்தோம். மாற்று மதக்காரர்கள் நம்மைப்
பார்த்து வியந்திருக்கின்றனர்; தங்கள் வெறுப்பையும் வயிற்றெரிச்
சலையும் கொட்டியிருக்கின்றனர். வேதாகமம் பேசியதைப் பேசி,
அது பேசாததைப் பேசாதிருந்திருக்கிறோம். ஆனால் இன்றோ
வேதாகமப் போதனைகளில் உறுதியாக நிற்பதை விடுத்து, எதிர்ப்பு
களைத் தவிர்க்க வேண்டி வளைந்து கொடுக்க முனைகிறோம்.
தேவனுக்கு ஏற்றவாறு நடப்பதை விட, மனிதர்களின் நற்சான்று
களுக்காக அலைகிறோம். தேவனுடைய ஆசீர்வாதத்தை அடைந்
துள்ள நாம், பாவக்கடலில் தத்தளிக்கும் மனிதனுடைய புகழ்ச்சிக்
காக அலையலாமா? ''இப்பொழுது நான் மனிதரையா, தேவனை-
யா, யாரை நாடிப்போதிக்கிறேன்? மனிதரையா பிரியப்படுத்தப்
பார்க்கிறேன்? நான் இன்னும் மனிதரைப் பிரியப்படுத்துகிறவனா-
யிருந்தால் நான் கிறிஸ்துவின் ஊழியக்காரனல்லவே. (கலா 1 : 10)
இது ஒரு கடினமான, ஆனால் அவசியமான தேர்வு-மனிதனையா,
தேவனையா? யாரை தேர்ந்தெடுக்கப் போகிறோம்?

புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்திலும் சகலரையும் அது
சத்தியத்துக்குள் வழி நடத்திற்று; இன்றும் அதே போல நம்மை
சத்தியத்துக்குள் வழி நடத்தக்கூடியதாயிருக்கிறது. புதிய ஏற்பாட்டு
சத்தியங்களை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்றால், பரிசுத்த
ஆவியால் ஏவப்பட்டு எழுதப்பட்டதில் தவறா? அல்லது அதை
கடைப்பிடிப்பதில் தவறா? பவுலுக்கும், லோத்துக்கும் சரியெனப்-
பட்டது, நமக்கும் சரியாகத்தானே இருக்கும்!

மீண்டுமாக நாம் சத்திய வசன புத்தகத்தின் மக்களாக
மாற வேண்டியது அவசர அவசியமான காரியம். ஒரு சபைக்கு
சத்தியவசனமே அஸ்திவாரமாயிருக்கிறது. மனிதருடைய பாராட்டு

களை விட சத்தியமே அதிக முக்கியத்துவம் பெற்றதாயிருக்கிறது. ஏனெனில் சத்தியம் (பாவத்தினின்று) நம்மை விடுதலையாக்கு- கிறது. (யோவான் 8:32) மனிதர்களை விட சத்தியம் மதிப்புள்ள- தாயிருக்கிறது. ஏனெனில் அது நம்மை தேவனோடு இணைக்கிறது. (யோவான் 14:6). உலக சம்பந்தங்களைவிட சத்தியமானது விலையேறப் பெற்றதாக இருக்கிறது. ஏனெனில் அது ஆத்மாவை பரிசுத்தமாக்கி இரட்சிப்படையச் செய்கிறது. (யோவான் 17:17). சத்தியம் சக்தி வாய்ந்தது. ஏனெனில் அது ஆத்தும சக்தி அளிக்- கிறது. (1 பேதுரு 1:22). ''சத்தியத்தை வாங்கு; அதை விற்காதே'' (நீதி 23:23). ''நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப் படுத்திக் கொள்ளுங்கள்'' (எபே 5:16).

நாளை என்ன நடக்கும்? நமது குழந்தைகளின் நிலை என்ன? உலகம் முழுவதும் காணும்படியாக சத்தியத்தின் கலங்- கரை விளக்காக ஒளி விடுவார்களா? அல்லது உலக மாயையில் சிக்கித் தவிக்கப் போகிறார்களா? வேதாகம அறிவு இல்லாத காரணத்தால் நம்மில் பலர் விலகிப் போய்க் கொண்டிருக்கிறோம். எனது நண்பர்களே! சகோதர, சகோதரிகளே! நாம் உலகின் உப்பாக இருக்க வேண்டும். ''நீங்கள் பூமியின் உப்பாயிருக்கிறீர்- கள்.'' இரட்சிப்பின் உண்மையை உலகுக்கு அறிவிப்பதில் பய- மின்றி நாம் வளருவோம்.

உலக ஆசாபாசங்களில் ஆர்வங்கொண்டு அதில் நாம் சிக்கி விட்டோமானால், நாம் அதிலேயே ஆழ்ந்து போவோம். பின் எவ்வாறு உலகின் வெளிச்சமாக இருக்கப் போகிறோம்? உப்பு சாரமற்றுப் போகிறதா? சத்தியத்தின் தனியா தாகத்தை சபை புறக்கணிக்கிறதா?

காரியங்கள் இப்படியிருக்கின்றனவா என வசனத்தை தினமும் சோதித்துப் பாருங்கள். அப் 17:11

தமிழில் : S S. ராஜன் மூலம் ; J. சோன் ஜான்சன்

அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொள்- ளுகிறவர்களானால், அவரை அறிந்திருக்கிறோமென்- பதை மக்கள் புரிந்துகொள்வார்கள்.

அவரை அறிந்திருக்கிறேனென்று சொல்லிக் கொண்டு, அவருடைய கற்பனைகளைக் கைக் கொள்- ளாமலிருந்தால் அவன் பொய்யன். அவனுக்குள் சத்- தியம் இல்லை. அவருக்குள் நிலைத்திருக்கிறேன் என்று சொல்லுகிறவன் அவர் நடத்தியேபடியே தானும் நடக்க வேண்டும். (யோவான் 2:3,4)

# சபையில் அங்கம் வகிப்பது அவசியமா?

இழந்து போனவர்களை இயேசு இரட்சிக்கிறார் (லூக். 19:10). இரட்சிப்படைய சபை அவசியந்தானா? ''சபை நல்லது தான்; ஆனால் இரட்சிப்புக்கு அது முக்கியமல்ல ''என பலர் எண்ணுகின்றனர். மனிதன் உருவாக்கிய போலி சபையைப் பற்றி இவ்வாறு எண்ணினால், நாம் வருத்தப்படமாட்டோம். ஏனெனில் அவைகள் மக்களை வஞ்சிப்பதற்காக பிசாசால் ஏற்படுத்தப்பட்டவைகள் இப்படிப்பட்ட கூட்டங்களைப் பற்றியே இயேசு கூறினார். ''என் பரம பிதா நடாத நாற்றெல்லாம் வேரோடே பிடுங்கப்படும் ''(மத். 15:13). இயேசு கட்டிய சபையைப் பற்றி நாம் ஆராய்ந்து பார்த்தால் (மத். 16:18) ஒரு மாறுபட்ட பதில் நமக்குக் கிடைக்கிறது.

கிறிஸ்துவின் ஒரே உண்மையான சபைக்குப் புறம்பே இரட்சிப்பு **இல்லை.** இரட்சிக்கப்பட்டவர்களை தேவன் சபையில் சேர்க்கிறார்.(அப். 2:47). கிறிஸ்து சரீரத்திற்கு(சபைக்கு) இரட்சகராயிருக்கிறார். (எபே. 5:23).

தனது இரத்தத்தினால் கிறிஸ்து சபையை சம்பாதித்துக் கொண்டார் (அப்.20:28). சபையின்றி ஒருவன் இரட்சிப்படையகூடுமானால், கிறிஸ்துவின் இரத்தமின்றியும் அவன் இரட்சிப்படையக் கூடும்.

சவுல் சபையைத் துன்புறுத்தினான் (1கொரி. 15:9). இயேசு கேட்டார்; ''சவுலே, ஏன் என்னை துன்புறுத்துகிறாய்?''(அப் 9:4) சபையைத் துன்புறுத்துவது அவரையே துயரடையச் செய்வதாக இருந்திருக்கிறது என்றால் சபைக்கும் கிறிஸ்துவுக்கும் உள்ள தொடர்பின் நெருக்கத்தை நாம் ஊகிக்க முடியும்;

''கிறிஸ்துவாலேயே இரட்சிப்பு உண்டு'' (2 தீமோ. 2:10). ஒருவன் 'கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம்' பெறுகிறான். (கலா 3:27). ஞானஸ்நானம் ஒருவனை ஒரே சரீரமாகிய சபைக்குள் இணைக்கிறது. (1கொரி. 12:13). எனவே, கிறிஸ்துவுக்குள் ஒருவன் ஞானஸ்நானம் பெறும் போது அவன் இரட்சிக்கப்பட்டு சபையில் சேர்த்துக் கொள்ளப்படுகிறான்.

மக்கள் பொதுவாக எண்ணிக் கொண்டிருப்பது போல, ''சர்ச்'' என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் சபையானது ஒரு கட்டிடமோ, ஒரு நிறுவனமோ அல்ல. சபை என்பது இரட்சிக்கப்பட்ட மக்-

களின் கூட்டம். 'எக்லேசியா' என்று கிரேக்க பதத்தின் மொழியாக்கமே சபை எனப்படுவது. 'எக்லேசியா' என்றால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள்' என பொருளாகும். பாவ வாழ்க்கையிலிருந்து விடுவிக்கப்பட்டு, கிறிஸ்துவில் ஐக்கியப்பட்ட ஒரு வாழ்க்கைக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் என்பதே புதிய ஏற்பாட்டில் சபை என்ற வார்த்தையின் பொருளாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் சபையில் அங்கம் பெறாதவர்கள் இரட்சிக்கப்பட்ட மக்களாக இருக்க முடியாது.

சபை பற்றி கூறப்படும் பல வார்த்தைகள் சபையின் முக்கியத்துவத்தை நமக்குப் புரிய வைக்கின்றன.

- ❋ சபையானது கிறிஸ்துவின் மணவாட்டி (எபே 5:22-23).
- ❋ சபையானது கிறிஸ்துவின் இராஜ்ஜியம் (கொலோ 1:13)
- ❋ சபையானது அவருடைய சரீரம் (1 கொரி 12:28).
- ❋ சபையானது அவருடைய குடும்பம் (1 தீமோ 3:15)

இரட்சிக்கப்பட்டவர்களே சபை எனப்படுவோர். இரட்சிப்படைய கிறிஸ்துவின் சபையில் அங்கம் வகிக்க வேண்டியது அவசியமாகும். அவருடைய சபைக்குப் புறம்பாக இரட்சிப்பு இல்லை. வேதாகமத்தில் காணப்படும் அந்த உண்மையான ஒரே சபையில் நீங்கள் அங்கத்தினரா?

**SSR**

**ஜான்வேடி**

உலகத்திலும், உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பு இல்லை.

ஏனெனில், மாமிசத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகியஉலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகள் அல்ல; அவைகள் உலகத்திலுண்டானவைகள்.

உலகமும் அதின் இச்சையும் ஒழிந்து போம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான். (யோவான் 2:15-17)

# இயேசுவின் வாழ்வை விவரிக்கும் சுவிஷேசங்களை பொருள் உணர்ந்து கற்றுக் கொள்ளும் வழிகள்

கதைகளில் வரும் கதாபாத்திரங்களின் செயற்பாட்டோடு ஒன்றி வாசிக்கும்பொழுது நாம் மகிழ்ச்சி அடைகிறோம். ஒரு புத்தகத்தில் உள்ள செயல் நோக்கங்களை புரிந்து கொள்ளாத-நிலையில் பெரும்பாலும் மக்கள் அப்புத்தகத்தை ஒதுக்கி வைத்-திடுவார்கள். இயேசு கிறிஸ்துவின் சுவிஷேசத்திற்கு இந்தநிலை இருக்குமாயின் கவலைக்குரியதாகும். மற்ற கதை புத்தகங்களை படிப்பதைப் போல், நாமும் சுவிஷேச புத்தகங்களின் செயல் நோக்கங்களை அறிந்து படித்தல் வேண்டும். நீண்டகால அனுபவ-முள்ள சில வேதாகம வாசகர்கள்கூட, இயேசு கிறிஸ்து இவ்வுலகில் இருந்தபொழுது அவருடைய வாழ்வின் செயல் நோக்கங்களை எவ்வாறு அறிந்து கொள்வது என்று இன்றும் கற்றுணராத நிலை-யிலே இருக்கின்றனர். இதனால் இவர்கள் நான்கு சுவிஷேங்களிலும் இன்னும் புலமை அடைய முடியவில்லை. நம்முடைய கர்த்தரும், இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவை பற்றி நாம் ரசித்து படிக்கும்பொழுது, அவருடைய செயல் நோக்கங்களை கோடிட்டுக் காட்ட சில எளிய விதிகள் கீழே தரப்பட்டுள்ளன

I. மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் இவர்களாலே விவரிக்கப்பட்ட இயேசு கிறிஸ்துவின் சுவிஷேசம் சரித்திரத்தின் ஒரு பகுதியாக இருப்பதாலே சுவிஷே புத்தகத்தின் காலம், இடம் மற்றும் முக்கியத்துவம் இவைகளை அறிந்திருத்தல் வேண்டும். ஆகையால் சுவிஷேச புத்தகத்தை கற்றுணர்வதற்கு தகுந்த நல்லதொரு பூகோளபடமும், பழைய ஏற்பாட்டை குறித்த ஓர் முன் அறிவும் தேவை. இயேசு கிறிஸ்து ஒரு சரித்திர நாயகன். நான்கு சுவிஷேசங்களிலும் இயேசு கிறிஸ்துவின் உபதேசங்களும், சிறு சம்பவகாட்சி வர்ணனைகளும் அடங்கியுள்ளன என்பது கவனிக்க தக்கது. வரலாற்றின் ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் ஒரு குறிப்பிட்ட மக்கள் இந்த உபதேசங்களை பெற்றுக்கொண்டனர். உபதேசிக்கப்பட்ட ஒவ்வொரு உபதேசங்களையும் புரிந்துகொள்ள சரித்திர கண்ணோட்டத்தோடு ஆராய்ந்து பார்க்க வேண்டும். அதாவது இயேசு கிறிஸ்து எந்த மக்களுக்காக உபதேசித்தாரோ அந்த மக்களின் குணநலன்களை அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

சிறு சம்பவ காட்சி வர்ணனைகள் (short narratives) என்ற அம்சத்தை சுருக்கமாக பார்ப்போம். மத்தேயு, மாற்கு, லூக்கா

மற்றும் யோவான் இவர்களை பத்திரிக்கை ஆசிரியர்களாக கருத்தில் கொள்ள வேண்டும். இந்த சிந்தனை சுவிஷேசத்தை கற்றுணர உதவும், முக்கியமான ஒரு துணை அம்சமாகும். பத்திரிகை ஆசிரியர்கள் தாங்கள் சேகரித்த தகவல்கள் எல்லாவற்றையும் பிரசுரிக்காமல், வாசகர்களின் ரசனைக்கு ஏற்ப செய்திக் கொத்துக்களை தேர்வு செய்து பிரசுரம் செய்வார்கள். அதேபோல் சுவிஷேசக எழுத்தாளர்கள், ஒரு குறிப்பிட்ட மக்களுக்கு, ஒரு குறிப்பிட்ட செய்தியை சொல்வதற்கு தாங்கள் சேகரித்த ஏராளமான தகவல்களிலிருந்து சில சம்பவ வர்ணனைகள், மற்றும் இயேசு கிறிஸ்துவின் உபதேசங்கள் இவைகளை தேர்வு செய்து கையாண்டிருப்பார்கள் என்பதை நாம் அறிய வேண்டும். ''ஆதிமுதல் எல்லாவற்றையும் திட்டமாய் விசாரித்து அவைகளை ஒழுங்காய் உமக்கு எழுதுவது எனக்கு நலமாய் தோன்றிற்று'' (லூக்கா 1:4) என லூக்கா மகா கணம் பொருந்திய தியோபிலுக்கு எழுதுவதை நாம் உதாரணமாக காட்டலாம்.

அப்படியானால் நான்கு சுவிஷேக எழுத்தாளர்கள், தங்களுக்கு வேண்டிய தகவல்களை எவ்வாறு, எங்கிருந்து சேகரித்தார்கள் என்ற வினா எழும்புகிறது? மேலும் ஒவ்வொரு எழுத்தாளரும் யாருக்கு எழுதினார்கள்? எப்பொழுது எழுதினார்கள் என்கிற வினாக்களை வினவ வேண்டியதாக இருக்கிறது. இதற்கான விடைகளை நாம் கண்டுகொள்ள உதவும்படியாக வேத வல்லுனர்கள். சரித்திர ஆசிரியர்கள் ஏராளமான தகவல்களை பிரசித்துள்ளார்கள்

**முதல்விதி :- சுவிஷேசத்தின் உண்மையான செயற்பாட்டினை அறிந்து பின்பற்ற சரித்திர பூர்வமான ஆய்வு செய்ய வேண்டும்.**

II. நாம் இயேசு கிறிஸ்துவின் உபதேசங்கள் மற்றும் சம்பவ வர்ணனைகள் இவைகளை எளிதில் புரிந்து கொள்ள சுவிஷேங்கள் நான்கினையும் ஒற்றுமைப் படித்துப் பார்க்க (to harmonize) வேண்டும். அதாவது நான்கு தனித்தனி சுவிஷேங்களுக்கு பதில் ஒரு ஒற்றுமை படுத்தப்பட்ட தொகுப்பு தேவை. இதனை நாம் உருவாக்க, பல வேத வல்லுநர்கள் திறன் ஆய்வுசெய்து, ''சுவிஷேச புத்தகங்ளில் காணப்படும் ஒற்றுமை'' என்ற தலைப்பில் பல புத்தகங்களை எழுதி வெளியிட்டுள்ள திறன் ஆய்வுகளில் சிலவற்றை நாம் பயன்படுத்திக் கொள்ளலாம். சுவிஷேசக எழுத்தாளர்கள் நால்வர்களிடமிருந்து சேகரித்த தகவல்களின் அடிப்படையில். நம்முடைய சொந்த சுவிஷேச தொகுப்பினை உருவாக்கி முடிக்கும் பொழுது, நம்முடைய மனத்தில் இயேசுவைக் குறித்தும், அவருடைய உபதேசங்களை குறித்தும் ஒரு தெளிவு உண்டாகும்

**இரண்டாம்விதி :- நாம் நான்கு சுவிஷேசங்களையும் ஒற்றுமைபடுத்த வேண்டும்.**

III. அந்திரேயாவும், மற்ற அநேகமக்களும் மேசியாவை கண்டபொழுது அடைந்த அதே மகிழ்ச்சியினை (யோவான் 1:41) நாமும் இன்று நான்கு சுவிஷேசங்களை (மத்தேயு, மாற்கு லூக்கா, யோவான்) வாசிப்பதன்மூலம் பெற்றுக்கொள்ள முடியும். புவியில் தன்னுடைய நோக்கங்கள் நிறைவேற இயேசுகிறிஸ்து சாத்தானோடு போராடிய செயல்நிலைகளை புரிந்து பின்பற்ற முதலாவதாக, இயேசு தான் புவிக்கு வந்த நோக்கத்தை அவர் மூலமாகவே சொல்ல கேட்க வேண்டும். ஆகையினால் நான்கு சுவிஷேசங்ளை கவனமாக படிக்கும்பொழுது இயேசு தன் சித்தத்தை வெளிப்படுத்தும் பகுதிகளின் மீது ''ஒரு கண் வைத்தவாறு''. (keeping a keen eye) படிக்க வேண்டும்.

உதாரணமாக இயேசு இழந்து போனவர்களை மீட்க இவ்வுலகத்திற்கு வந்தார். நம்மை இரட்சிக்க தேவனுடைய ராஜ்யத்தை குறித்து பிரசங்கித்தார். நம்முடைய பாவத்திற்காக அவர் மரித்தார் என்று நாம் விசுவாசிக்கிறோம். மேற்சொன்ன இரண்டு நோக்கங்களை நிறைவேற்ற இயேசு தான் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று வெளிப்படுத்துவது அவசியமாயிற்று என்று நாம் உணரவேண்டும். பழைய ஏற்பாட்டில் இயேசுவை குறித்து தீர்கதரிசனமாக கூறப்பட்டவைகளை நிறைவேற்றும்படியாக இயேசு கிறிஸ்துவின் வாழ்வும், நோக்கங்களும் அமையவேண்டியதாய் இருந்தன. அதாவது தீர்கதரிசனத்தை நிறைவேற்றுதல் அவருடைய இலட்சியங்களில் ஒன்றாக இருக்கிறது. இத்தகைய சரியான விசுவாசம், நாம் பெற்றிருந்தாலும்கூட, இந்த பாடத்தில் இயேசு தான், புவிக்கு வந்த நோக்கத்தை இயேசுவே வெளிப்படுத்துவதை கண்டறிவோம்.

**மூன்றாம்விதி :- இயேசு கிறிஸ்துவின் செயல் நோக்கங்களை அறிந்துகொள்ள நான்கு சுவிசேஷங்களையும் வாசிக்க வேண்டும்.**

IV. ஒவ்வொரு நாடகத்திலும் கதாநாயகனும் வில்லனும் இருப்பார்கள். கதை அல்லது நாடகத்தின் முக்கிய கதாபாத்திரம். கதாநாயகன் ஆவான் இலட்சியத்தை அடைந்தேறும்படி பாடுபடுவான் இதற்காகவே தன் ஜீவியத்தை அர்ப்பணிப்பான். கதாநாயகனின் இலட்சியம் நிறைவேறாதபடி வில்லன் திட்டங்கள் வகுத்து முறியடிக்க முயற்சிப்பான். இது கதையின் விறுவிறுப்பைக் கூட்டக் கூடியதாக இருக்கிறது.

இயேசு கிறிஸ்துவின் சுவிஷேசம் தனித்தன்மை வாய்ந்தது. ஏனென்றால் சம்பவ நிகழ்ச்சிகள் பூமியில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் நடந்தவையானாலும், கதாநாயகன் இயேசுவும், வில்லன் சாத்தானும் இவ்வுலகத்தை சார்ந்தவர்கள் அல்ல. ஆவி மண்டலத்தைச் சார்ந்தவர்கள். இயேசு எப்படியாக உலகத்திற்கு வந்து சாத்தானின் வல்லமையை மேற்கொண்டு தன்னுடைய நோக்கங்களை (சித்தத்தை) நிறைவேற்றினார் என்று விவரிக்கும் புத்தகமே இயேசு கிறிஸ்துவின் சுவிஷேசமாகும்.

ஒரு கதையில் கதாநாயகன்-வில்லன் இவர்களுடைய முயற்சியில் உதவி செய்யும் துணைகதாபாத்திரங்களும் உண்டு. இத்தகைய கதாபாத்திரங்களை எழுத்தாளர் அறிமுகபடுத்தும் பொழுது, அறிமுகப்படுத்தபட்டவர்கள் கதாநாயகன்பக்கமா அல்லது வில்லன் பக்கமா என்று அறிந்து கொள்ள வாசகர்கள் ஆவலாயிருப்பார்கள். இயேசு கிறிஸ்துவின் சுவிஷேசத்துக்கும் மேற் சொன்னவைகள் பொருந்தும். உதாரணமாக மாற்கு சுவிசேஷசத்தின் முதல் அதிகாரத்தில் இயேசுகிறிஸ்து, சாத்தான் இருவரையுமே, மாற்கு வாசகர்களுக்கு அறிமுகப்படுத்துகிறார். மேலும் இயேசுகிறிஸ்துவுக்குத் துணையாக செயல்படுகிற யோவான் ஸ்நானகன் மற்றும் இயேசுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட அப்போஸ்தலர்களை அறிமுகப்படுத்துகிறார். தேவன், பரிசுத்த ஆவியானவர் மற்றும் தேவ தூதர்கள் இந்த அதிகாரத்தில்அறிமுகப்படுத்தப்படுகிறார்கள்.இவர்கள் இயேசு கிறிஸ்துவின் நோக்கங்கள் நிறைவேறும்படி உதவ ஆயத்தமாய் இருக்கிறார்கள். அதே சமயத்தில் பிசாசுகளையும் அசுத்த ஆவிகளையும் வசனங்கள் 23 மற்றும் 34ன் மூலம் நமக்கு அறிமுகப்படுத்துகிறார்.

**நான்காம் விதி :- கதாநாயகன் வில்லன் மற்றும் இணைந்து செயலாற்றும் துணை கதாபாத்திரங்கள் இவர்களை வகைப்படுத்தி பட்டியல் போடவேண்டும்.**

V. முன்சொன்ன விதிகளின் காரணமாக நாம் நான்கு சுவிசேஷங்களை வாசிப்பதிலும். திரும்ப வாசிப்பதிலும் அதிக காலத்தை செலவழிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. சுவிசேஷசங்களின் சாராம்சங்களை நினைத்த மாத்திரத்திலே சொல்லும் அளவுக்கு வாசித்து புலமை அடைய வேண்டும். மேலும் மற்றவர்கள், கற்றறிந்து எழுதியவற்றையும் நாம் வாசிக்கவேண்டும்.

இயேசுகிறிஸ்து இஸ்ரவேலில் செயலாற்றிய மூன்றரை ஆண்டு சுவிஷேசபணியில் நாம் இணைந்துசெல்ல ஆயத்தமாக உள்ளோம். இயேசுகிறிஸ்துவின் சுவிஷேசத்தின் செயற்பாட்டினை பின்பற்ற ஆயுத்தமாக இருக்கும் அதேவேளையில் மற்றொரு விதியையும்

நாம் பின்பற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம். மத்தேயு, மாற்கு லூக்கா மற்றும் யோவான் இவர்கள் தாங்கள் சேகரித்த தகவல் தொகுப்புகளிலிருந்து நமக்கு சுவிஷேசங்களை தந்துள்ளார்கள் என்று முன்னரே பார்த்தோம். இயேசு கிறிஸ்து பரமேறிய இருபது ஆண்டுகளுக்கு பிறகு தான் சுவிசேஷச எழுத்தாளர்கள் எழுதினார்கள் என்பது நாம் முக்கியமாக அறிந்து கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

பத்திரிகை ஆசிரியர்கள் தங்களுடைய வாசகர்களை மனதில் கொண்டு எப்படியாக செய்திகளை வடிவமைப்பார்களோ அப்படியாக சுவிஷேக ஆசிரியர்களும் குறிப்பிட்ட மக்களை மனதில் கொண்டு (நம்மையல்ல) எழுதியிருப்பார்கள். தங்களுடைய எண்ணங்கள் நிறைவேற ஏராளமான தகவல்களை பெற்றிருந்தார்கள். இவைகளை தொகுத்து வகைப்படுத்தி லூக்கா தியோபிலுவுக்கு உணர்த்த விரும்பி எழுதியதுபோல் மற்றவர்களும் செய்திருப்பார்கள். தியோபிலு உண்மையான சத்தியத்தை அறிந்துகொள்ள வேண்டுமென லூக்கா விரும்பினார். ஒருவேளை தியோபிலு இக்காரியங்களை குறித்து வாய்மொழியாக கற்றுணர்ந்திருக்கக்கூடும்.

எழுத்தாளர்கள் தங்களுடைய குறிக்கோள் நிறைவேற பலசம்பவ வர்ணணைகள், இயேசு கிறிஸ்துவின் உபதேசங்கள் ஆகியவைகளைத் தேர்வு செய்து வகைப்படுத்தியிருப்பார்கள். சுவிஷேசத்திலுள்ள சம்பவ வர்ண்னைகளை நாம் வாசித்து இயேசுவின் செயல்களை அறிய உற்றுநோக்குவோம். இயேசுவானவர் தன்னுடைய நோக்கங்கள் பூமியில் நிறைவேற்றும் பொழுது, நாமும் அவரோடு ஒன்றிபோவோம். உபதேசிப்பதும், உபதேசத்தின் மூலமாய் மக்களின் மனத்தை மாற்றுவதும் அவருடைய நோக்கங்களில் ஒன்றாக இருக்கிறது. நோக்கங்கள் நிறைவேறுதல் அவருடைய உண்மையான செயற்பாடாக இருப்பதினாலே, நாம் இயேசுகிறிஸ்துவின் செயற்பாட்டை அறிந்து கொள்ளும் அதேவேளையில் மக்களின் செயற்பாட்டின் மீதும் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

நிகழ்ச்சி வர்ணனைகளை வாசிக்கும்பொழுது நாம் இரண்டு பட்டியல்களை உருவாக்க வேண்டும். ஒரு பட்டியலில் இயேசு என்ன செய்தார் என்றும், மற்றொரு பட்டியலில் மக்களுடைய பிரதிபலிப்பு என்ன என்பதையும் குறித்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு நிகழ்ச்சி வர்ணனையிலிருந்து நாம் இரு பட்டியலுக்கு வேண்டிய தகவல்களை எளிதில் சேகரிக்கும்வண்ணம் எழுத்தாளர்கள் பொதுவாக நிகழ்ச்சி வர்ணனைகளை அமைத்திருப்பார்கள். மக்களோடு செயல் தொடர்புடைய சில நோக்கங்கள் வெளிப்-

படையாக நமக்கு தெரியாதபொழுது, நாம் முழுமையாக அவருடைய நோக்கங்களை பட்டியல் போடுவதில் தவறி விட்டவர்களாவோம்.

இயேசுகிறிஸ்து நிறைய காரியங்களை குறுகில காலத்தில் செய்யவேண்டியதாக இருந்தது. இதனால் அவர் காலத்தை வீணடித்திருக்க மாட்டார் என்று நம்புகிறோம். இயேசுவானவர் தன்னுடைய நோக்கங்கள் நிறைவேற செயல்படுகின்ற காரியங்களோடு நாம் ஒன்றிபோவோமேயானால், நம்மால் இயேசுவானவர் தன்னுடைய சுவிசேஷச பணியில் ஒவ்வொரு கால கட்டத்திலும் தன்னுடைய நோக்கங்கள் நிறைவேற எந்த அளவு முன்னேறிச் சென்றார். என்று நம்மாம் சொல்ல முடியும். மேலும் எழுத்தாளர்கள் இயேசுகிறிஸ்துவின் செயல், மக்களின் பிரதிபலிப்பு ஆகியவை குறித்த ஒரு சுருக்கமானசெயல் அறிக்கையை ஆங்காங்கே கொடுத்திருப்பார்கள் (மாற்கு 3:8)

இயேசு கிறிஸ்துவின் நோக்கங்கள் நிறைவேறுதலை நாம் இயேசுவின் செயல்களிலிருந்து நேரிடையாக கண்டுகொள்ள முடியாது. ஆனால் செயல்களை கண்ட மக்களின் பிரதிபலிப்பிலிருந்து நாம் கண்டு கொள்ளமுடியும் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். உதாரணத்திற்கு இயேசு தான் தேவனுடைய குமாரன் என்று நிரூபிப்பது அருடைய ஒரு குறிக்கோளாக இருந்தது. தன்னுடைய சுவிஷேசபணியின் மத்தியில் தன்னுடைய மேற்சொன்ன நோக்கம் எந்த அளவு பூரணப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்பினார். ஆகவே தன்னை குறித்து மக்களின் நம்பிக்கை என்ன என்ற வினாவினை எழுப்பினார். இயேசுகிறிஸ்து தன் சீஷர்களை நோக்கி இந்த ஜனங்கள் என்னை யாரென்று சொல்கிறார்கள்? என்று கேட்டார். தேவனுடைய இராஜ்யத்தை குறித்த ஓர் அறிவும் அதில் மக்கள் கொண்ட விசுவாசத்தையும் அறிந்துகொள்வது இயேசுகிறிஸ்துவின் நோக்கங்களாக இருந்தன.

**ஐந்தாம் விதி :- நிகழ்ச்சிவர்ணனைகளை வாசிக்கும் பொழுது இரு பட்டியல்களை உருவாக்க வேண்டும். இயேசு என்ன செய்தார், எப்படியாக மக்கள் பிரதி பலித்தார்கள் என்று வகைப்படுத்தி பட்டியல் போட வேண்டும். இயேசுவின் நோக்கங்களையும், ஜனங்களின் பிரதிபலிப்புகளையும் நாம் அறிந்து கொள்ளும் பொழுது நாமும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோடு செயல்நிலையில் இருப்போம் இவ்விதமாக நாம் சுவிஷேசங்களை எளிதில் புரிந்து வாசித்து பயன் பெறுவோம்.**

**—வெயின் டேவிஸ்**

# வேதாகமம் கூறுகிற ஒன்றுகள்

''ஒரே வழிதான், ''இது தான் சத்தியம்'' என்று சொல்வோமானால் மக்களுக்கு எவ்வளவு எரிச்சல் உண்டாகிறது என்று அறியும்போது நமக்கு உண்டாகும் மனவேதனை கொஞ்ச நஞ்சமன்று. மாறாக, ''வழிகள் வித்தியாசமாக இருந்தாலும், நல்லவர்கள் எல்லாம் மோட்சம் போவார்கள்'' நீங்கள் நம்புகிற காரியங்களில் உறுதியுள்ளவர்களாக இருக்க வேண்டும். நீங்கள் எதை நம்புகிறீர்கள் என்பது முக்கியமில்லை'' என்போமானால் அவைகளை வரவேற்கிறார்கள் 'ஆரோக்கியமான உபதேசம் ஒன்று தான். மற்றவைகள் எல்லாமே ஏதோ ஒரு விதத்தில் தவறுடையது. என்று சொல்வோமானால் வருகிற எதிர்ப்பைச் சமாளிக்க ஆயத்தமாக இருக்க வேண்டும்.

தூய கிறிஸ்தவத்தை வைராக்கியமாகப் போதிப்பதனுல் ஏற்படும் ஆபத்தை ஸ்தேவான் சீக்கிரமாகவே கண்டு கொண்டார் அந்நாட்களில் மதத்தின்மகுடாதிபதிகள் என்றுஎண்ணப்பட்ட யூதத் தலைவர்களிடம் உங்கள் நம்பிக்கை தவறானது என்று கூறி, இயேசுக் கிறிஸ்துவே நீங்கள் எதிர்பார்த்துக்கொண்டிருந்த மேசியா, அவரை நீங்கள் தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்க வேண்டும் என்று சொன்னதற்காக அவன் இன்னுயிரைக் கொடுக்க வேண்டியதாயிருந்தது. (அப் 7:59). இயேசுக் கிற்ஸ்துவில் மட்டுமே இரட்சிப்பு உண்டென்று சொன்னதற்காக அப்போஸ்தலன் பேதுரு சிறையில் அடைக்கப்பட்டார். (அப் 4:12)

தேவன் ஒருவரே என்று வேதாகமம் கூறுகிறது. (எபே 4;6( என்று கூறுவோமானால், மற்ற மதத்தினர் இதை ஜீரணிக்க முடியாமல் நெளிகிறார்கள். ஆனால் நாம் சிருஷ்டிகராகிய அவருக்குக் கணக்கு கொடுத்தேயாக வேண்டும் என்று வேதம் விளம்புகிறது. (வெளி 20:12) தேவன் ஒரே ஒரு மார்க்கத்தைத் தான் அங்கீகரிக்கிறார் என்று நாம் சொல்வோமானால் மற்றவர்கள் நம்மை கேலி செய்வார்கள். அதே போல உண்மையான சபை ஒள்று தான் என்றாலும் நம்மை பரிகாசிப்பார்கள் அதனால் எல்லாம் உண்மை மாறுவதில்லை அதே போல ''ஒரே சரீரம்'' என்று வேதாகமம் போதிக்கிறது. (எபே 4:4) அந்த ஒரே சரீரமாகிய சபைக்கு இயேசு கிறிஸ்துவே தலையாக இருக்கிறார். (கொலோ 1:18).

இரட்சிக்கப் படுவதற்கு ஒரே வழி தான் உண்டு. அதை ஒரே விசுவாசம் என்று வேதாகமம் கூறுகிறது (எபே 4:5) அந்த ஒரே விசுவாசத்துக்குக் கீழ்ப்படிவது இரட்சிப்பின் மகிழ்ச்சியைத் தரும்.

*இரட்சிப்பு உண்டாவதற்கு, தன் செய்கைகளுக்குப் பொறுப்பேற்கும் வயதுள்ள ஒவ்வொருவரும் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டும். (மாற்கு 16:16) தங்கள் பாவங்களுக்காக மெய் மனஸ்தாபப்பட்டு மனம் திரும்ப வேண்டும். (அப் 2 : 38) இயேசுக்கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்ய வேண்டும். (ரோமர் 10:9) தங்கள் பாவங்கள் கழுவப்பட கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற வேண்டும். (அப் 2:38). நாம் யாவருமே பாவிகளாக இருக்கிறபடியால் இந்த இரட்சிப்பின் திட்டத்தை ஏற்றுக் கொள்ளாதவர்கள் வாழ்வடைய முடியாது.* **தேவனை அறியாதவர்களுக்கும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும், நீதியுள்ள ஆக்கினையைத் தரும்படிக்கும் இயேசு கிறிஸ்து வருவார்.** *(2 தேச 1 : 7, 8). தப்பித்துக்கொள்ள எவ்வித வழியும் கிடையாது.*

*அதே போல அந்த ஒரே சபையில் ஆராதிப்பது எப்படி என்பதைக் கூட வேதாகமம் கூறியிருக்கிறது. ஆனால் மனிதர்கள் தங்களுக்குத் தோன்றியபடி அதற்குப்பல மாற்று முறைகளை மேற்கொண்டிருக்கிறார்கள். அவைகளை வேத வசனம் கண்டிக்கிறது (மத் 15:9) ஆனால் புதிய ஏற்பாடு ''***ஆவியோடும், உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டும்** *என்று தெளிவாய்ப் போதிக்கிறது. (யோவான் 4:23) அதை விட்டு விலகும் போது நம்முடையஆராதனை பொருளற்றது, வீண்.* **நாம் திருவசனத்தைக் கேட்கிறவர்களாக மாத்திரம் இல்லாமல் அதன்படி செய்கிறவர்களாகவும் இருக்க வேண்டும்.** *(யாக் 1 : 25 மத் 7:21-23)*

**உங்களுக்குண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டது போல, ஒரே சரீரமும் ஒரே ஆவியும் உண்டு. ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே திருமுழுக்கும், எல்லோருக்கும் ஒரே தேவனும், பிதாவும் உண்டு. அவர் எல்லார் மேலும் எல்லோரோடும் உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர்.** *(எபே 4:4-6) என்பதை சிந்தித்து உங்கள் நிலையை உறுதி செய்து கொண்டு வாழ்ந்து இதையே போதியுங்கள்.*

**விக்டர் ஸ்வெயின்**

# திருமுழுக்குக்குப் பிறகு என்ன?

**திருமுழுக்கு ஓர் முடிவு மட்டுமல்ல - அது ஓர் ஆரம்பமாகும்.**

திருமுழுக்கின் மூலம் பாவ மன்னிப்படைகிறோம் என்று அப் 2:38 கூறுகிறது. திருமுழுக்குப் பெற்றுக் கொண்ட பிறகு ஒருவன் தேவனோடு ஒரு புதிய உறவை அடைகிறான். ரோமர் 6:6 கூறுகிறபடி **நாம் இனிப்பாவத்துக்கு ஊழியம் செய்யாதபடிக்கு பாவ சரீரம் ஒழிந்து போகும் பொருட்டாக நம்முடைய பழைய மனுஷன் அவரோடே கூட சிலுவையில்அறையப்பட்டதென்றுஅறிந்திருக்கிறோம்**. அதே நேரத்தில் அது கிறிஸ்தேசுவுக்குள்ளாக உயிர்ப்பிக்கப்பட்டு புதிய வாழ்க்கையைத் தொடங்குவதற்கான சிந்தையோடு கூடிய புதிய மனிதனுடைய உயிர்த்தெழுதலும் ஆகும். கர்த்தரின் சுவிசேஷத்துக்குத் கீழ்ப்படிந்த மனிதனின் இதயத்தின் தீர்மானத்தின்படி, பாவவாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்தாயிற்று. இப்பொழுது தேவனுக்குத் தொண்டு செய்யும் ஓர் புதிய வாழ்க்கை மலர்கிறது.

**திருமுழுக்குக்குப் பிறகு ஒருவன் தேவனுடைய குடும்பத்தில் ஓர் அங்கமாகிறான்.**

சபையை தேவனுடைய வீடு அல்லது குடும்பம் என்று புதிய ஏற்பாடு வர்ணிக்கிறது (1தீமோ 3:15) அந்தக் குடும்பத்தில் தேவன் தகப்பனாகவும், இயேசுகிறிஸ்து மூத்த சகோதரனாகவும், மற்றைய அங்கத்தினர்கள் பிரியமான சகோதர சகோதரிகளாகவும் அழைக்கப்படுகிறார்கள் (எபி 2:11, 12, எபே 5:1) நாம் தேவனுடைய பிள்ளைகளாயும் தொண்டர்களாயும் இருக்கிறபடியால் நாம் செய்ய வேண்டிய சில கடமைகளும் உண்டு. தேவன் தமது சித்தத்தைத் தம்முடைய வார்த்தைகளினால் வெளிப்படுத்தியிருக்கிறபடியால், தேவனைப் பிரியப்படுத்த விரும்புகிற அனைவரும் அவர் வார்த்தைகள் அடங்கிய வேதாகமத்தைப் பகுத்துப் படிப்பதை நம்முடைய கடமையாகக் கொள்ள வேண்டும், ''நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும், சத்திய வசனத்தை நிதான்மாய்ப் போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாக இரு (2தீமோ 2:15) தேவனுடைய வசனத்தை ஆய்ந்து பார்த்து, ''காரியங்கள் இப்படியிருக்கிறதா!'' என்று ஆச்சரியப்பட்ட பெரோயா பட்டணத்து மக்களின் சீரிய முன் உதாரணத்தை நாம் பின்பற்ற வேண்டும். (அப் 17:11) எப்படிப் புதிதாய்ப் பிறந்த குழந்தைகள் பாலின் மீது வாஞ்சையாகி

அழுகிறது போல நாமும் திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின் மீது வாஞ்சையாக இருக்க வேண்டும். (1பேது 2:3).

**திருமுழுக்குப் பெற்ற ஒருவர் தேவனுடைய இராஜ்ஜியத்தை முதன்மையாகக் கருத வேண்டும்.**

வேதாகமம் கர்த்தருடைய சபையை இராஜ்ஜியம் என்று குறிப்பிடுகிறது. இயேசு, ''**முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகள் எல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்**'' (மத் 6:33) என்று உலகக் கவலையில் சிக்கிக்கொண்டு தேவனுடைய காரியங்களை அசட்டை செய்கிற மக்களுக்கு அறிவுரை கூறுகிறார். தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிற-இராஜ்ஜியத்தின் குடிமக்களாக இருக்கிற நாம் கர்த்தருடையகாரியங்களுக்கு முதலிடம் கொடுத்தோர்மேயானால், மற்ற காரியங்கள் எல்லாம் தானாகவே வந்து சேரும். நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறபடியால் நாம் தேவனுடைய இராஜ்ஜியத்தின் பிரஜைகள். சபையின் அங்கங்கள். அப்படியானால் நாம் கர்த்தருடைய நாளில் பிராந்திய சபையில் உள்ள ஏனைய அங்கத்தினர்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். **நாம் சபை கூடி வருதலை விட்டு விடக் கூடாது** என்று அறிவுறுத்தப்படுகிறோம். (எபி 10:25) **அன்புக்கும் நற்கிரியைக்கும் நாம் ஏவப்படுவதற்கு** அது அவசியம் என்று அதற்கு முந்திய வசனம் சொல்லுகிறது.

ஒரு ராஜ்ஜியத்தில் இருக்கும் ஒரு குடிமகன் தேவனை ஆராதித்துக் கனப்படுத்துவது அவன் மேல் விழுந்த கடமை, ஆகையால் சபையின் மூப்பர்கள் திட்டமிட்டிருக்கிற வேதாகமம் வகுப்புகள், ஜெப ஆராதனைகள் ஞாயிறு பள்ளி போன்ற காரியங்களில் பங்கு கொள்ளுதல், உதவி செய்தல் போன்ற காரியங்களில் ஈடுபாடு கொண்டு, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து, ஒத்துழைத்து அவர்கள் நமக்குக் கொடுக்கும் ஆலோசனைகளை பணிவோடும் உண்மையோடும் செய்ய வேண்டும் (எபி 13:17) நாம் தேவனை உண்மையோடும் பயபக்தியோடும், ஆராதிப்பதே அவருக்கு தொண்டு செய்வதற்குச் சமமாகும்.

**திருமுழுக்குக்குப் பிறகு எஞ்சியுள்ள வாழ்க்கை முழுவதும் கிறிஸ்துவுக்கே.**

திருமுழுக்கினால் ஒருவன் கிறிஸ்துவைத் தரித்துக் கொள்கிறான் (கலா 3:27) கிறிஸ்து கிறிஸ்தவர்களாயிருக்கிற நமக்குள் மகிமையின் நம்பிக்கையாக இருப்பதே அந்த இரகசியம் என்கிறார் பவுல் (கொலோ 1:27) ''கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்;

நான் இப்பொழுது மாமிசத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்பு கூர்ந்து எனக்காகத் தம்மைத் தாமே ஒப்புக் கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக் கிறேன்'' கலா 2:20 என்று அப்போஸ்தலன் பவுல் சொன்னதை போல சொல்ல வேண்டும். மேலும் பவுல் **கிறிஸ்து எனக்கு ஜீவன்** என்றும் தன் விசுவாச உறுதியை விளக்குகிறார்.

(பிலி 1:21).

ரோமர் 12:1,2ல் இந்தக் கருத்து மிகவும் அருமையாய் வெளிப்படுத்தபட்டிருக்கிறது. கிறிஸ்தவர்களாகிய நாம் ஜீவபலி யாகவும், வாழ்க்கையில் பரிசுத்தமாகவும், ஆவிக்குரிய தொண்டு செய்பவர்களாகவும், உலகத்தில் மலிந்து கிடக்கிற பாவத்திற்கு விலகியிருந்து, தேவனுடைய சித்தம் இன்னதென்று நம்முடைய வாழ்க்கையில் காண்பிக்க வேண்டும். இதை நாம் செயல்படுத்திக் காட்ட வேண்டும் என்று சொன்னால் நாம் உண்மையுள்ளவர்-களாக இருக்கவேண்டும். ''ஆகையால் எனக்குப் பிரியமான சகோதரர்களே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதா வாயிராது என்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பார்களாக! (கொரி 15:58)

மேற்சொன்ன காரியங்கள் அனைத்தையும் கூட்டித் தொகுத்-துப் பார்த்தால் நமக்கு விளங்குகிற காரியம் :

அ) ஆராதனையில் தவறாமல், குறிப்பிட்ட நேரத்தில் கலந்து கொள்ள வேண்டும்.

ஆ) சபையின் வேலைத் திட்டங்களில் பங்கு கொள்ள வேண்டும்.

இ) வேத ஆராய்ச்சி வகுப்புகள், ஜெப ஆராதனைகள் ஆகிய-வைகளில் கலந்து கொள்ள வேண்டும்.

ஈ) புதிய, பலவீனமான அங்கத்தினர்களுக்கும் சத்தியம் தெரி-யாத மக்களுக்கும், சத்தியத்தை எடுத்துக் கூறி, அவர்களை பலப்படுத்த வேண்டும்.

உ) வாழ்விலும், செய்யும் தொழிலிலும், கிறிஸ்துவுக்குச் சாட்சி-யாக இருக்க வேண்டும்.

நாம் ஏற்றுக் கொண்ட விசுவாசத்துக்கும், தேவனுடைய சித்தத்துக்கும் இசைவாக நாம் பயபக்தியுடன் வாழ்ந்து, சீஷத்-துவத்தின் விலையை உணர்ந்தவர்களாய் அர்ப்பணிப்புச் சிந்தை-யோடு வாழ்வதற்கு முயல வேண்டும்.

(அட்டையின் உள்பக்கம் பார்க்கவும்)

YOUR ATTENTION PLEASE!

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH** The voice of Truth—Speakers: Reggie Gnanasundaram, J. C. Choate, John Stacy.
The Voice of Truth, Post Box 3815, New Delhi- 110049
Mondays-9: 00 to 9: 15 P. M.
Fridays - 7:45 to 8: 00 P. M.

**HINDI** Satya Susamachar-Speaker : Sunny David.
Satya Susasamachar, Post Box 3815, New Delhi -110049
Thursdays-7: 15 to 7-30 P. M.
Fridays-- 8: 00 to 8:15 P. M.
Saturdays-8 00 to 8:15 P. M.
Sundays-9 00 to 9: 15 P. M.

**TELUGU** The voice of Truth-Speaker: Joshua Gootam
The Voice of Truth, Post Box 80, Kakinada 533001.
Sundays-2.15 to 2:30 P. M.
Tuesdays-2:15 to 2:30 P. M.
Thursdays-2:15 to 2:30 P. M.
Fridays -2:15 to 2:30 P. M.
Saturdays-2:15 to 2:30 P. M.

**TAMIL** The Way of Truth-Speaker : P. R. Swamy.
The way of Truth, Post Box 8405, Bangalore 560084
Tuesdays-5:30 to 5:45 P.M.
Thursdays-6:45 to 7:00 P.M.
Sundays-6:45 to 7:00 P. M.

**MALAYALAM** The Voice of Truth-Speaker: P. K. Varghese
Church of Christ Sunny Meads Lane Trivandrum-34 (Kerala
Tuesdays-3:45 to 4:00 P.M.
Fridays-3:45 to 4:00 P.M.

**KANNADA** The Voice of Truth-Speaker : Robert Rathnakar
Box No 448, Bangalore 560004
Sundays-1:45 to 2:00 P. M.

## ALL ARE ENCOURAGED TO LISTEN

Bible Correspondence Courses and Christian Literature are available in these different languages from the addresses listed Also the radio sermons are available in book form.

## நெல்லை, வ.உ.சி. குமரி மாவட்ட திருமறை ஆசான் வாசகர்கள் கருத்தரங்கம்.

### பாளையங் கோட்டை

1) மையமான இட வசதிக்காக
2) நல்ல கால நிலைக்காக
3) நல்ல சீதோஷ்ண நிலைக்காக
4) வாசகர்களின் ஆர்வத்திற்காக
5) வாசகர்களின் பொருளாதார சூழ்நிலைக்காக
6) கலந்து கொள்பவர்களுடைய உணவு, உறைவிட வசதிக்காக

தினமும் பத்து நிமிடமாவது ஜெபிக்க வேண்டுகிறோம்.

இங்ஙனம்

**ஆசிரியர் மற்றும் கருத்தரங்கக் குழுவினர்**

Published by Church of Christ and Printed at Jeevasakthi Press
Erode-638 003.
Editor. E.Z. Selvanayagam.

TO

PRINTED MATTER BOOK-POST

If undelivered please return to:
The Editor
**THIRUMARAI AASAAN**
Post Box No: 58 ERODE - 638 001.